**செய்தி வெளியீடு எண்.585** **நாள். 14.9.2007**

ஒவ்வொரு ஆண்டும் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த செப்டம்பர் 15—ஆம் நாளன்று தமிழ்நாட்டில் காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித் துறை, சிறைத்துறை, ஊர்க்காவல் படைப்பிரிவு மற்றும் காவல் துறை விரல்ரேகைப் பிரிவுகளில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் காவலர்களின் சிறப்பான பணிகளைப் பாராட்டி, அவர்களை ஊக்குவிக்கும் வகையில் 'தமிழக முதலமைச்சரின் பதக்கங்கள்' அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன.

2007-ஆம் ஆண்டுக்கான தமிழக முதலமைச்சரின் அண்ணா பதக்கங்கள் பெறுவதற்காக காவலர் நிலை முதல் காவல் கண்காணிப்பாளர் வரையில் 100 காவல் துறை அலுவலர்களும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறையில் முன்னணி தீயணைப்பு வீரர் நிலை முதல் துணை இயக்குநர் வரையில் 10 அலுவலர்களும், சிறைத்துறையில் இரண்டாம் நிலை வார்டர் முதல் உதவி சிறை அலுவலர் வரையில் 10 அலுவலர்களும், ஊர்க்காவல் படையில் உதவி பிரிவு தலைவர் நிலை முதல் உதவி தலைமை தளபதி வரையில் 5 அலுவலர்களும், காவல்துறை விரல்ரேகைப் பிரிவைச் சார்ந்த 2துணை காவல் கண்காணிப்பாளர்களும் ஆக மொத்தம் 127 அலுவலர்கள் தகுதிபடைத்துள்ளார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, காவல்துறையில் இரண்டு ஆய்வாளர்கள் மற்றும் ஒரு உதவி ஆய்வாளர் ஆக மொத்தம் 3 பேர்களுக்கு, அவர்கள் ஆற்றியுள்ள வீரதீரச் செயல்களைப் பாராட்டி, இந்த ஆண்டிற்கான தமிழக முதலமைச்சரின் வீரதீரச் செயல்களுக்கான பதக்கங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

கடமைப் பற்றுறுதிக்கான அண்ணா பதக்கங்கள் பெறுகின்றவர்களில் காவலர் முதல் தலைமைக் காவலர்வரை உள்ளவர்களுக்கு தலா 2000 ரூபாய் வீதமும், உதவி ஆய்வாளர், ஆய்வாளர்களுக்கு தலா 3,000 ரூபாய் வீதமும், காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்களுக்கு தலா 5,000 ரூபாய் வீதமும் பதக்க விருதுத்தொகையாக அளிக்கப்படும். மேலும், வீரதீரச் செயல் புரிந்தமைக்காக காவல்துறையில் பதக்கம் பெறுபவர்களுக்கு மாதந்தோறும் 100 ரூபாய் பதக்கப்படியாக வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், 2007—க்கான தமிழக தமிழக முதலமைச்சரின் அண்ணாப் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு பின்னர் நடைபெறவுள்ள விழாவில், பதக்கங்கள் வழங்கிச் சிறப்பிப்பார்கள்.

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9